# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்

------

## அசல் வழக்கு எண்.15/2024

**2026 ஆம்** வருடம் ஜுன் மாதம் 11 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமு | ஜாதி | : | |
| த.பெ | : | பெருமாள் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 58/2026 |
| தேதி | : | 11.06.2026 | | | |

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் UDR ல் பெயர் மாறிவிட்டதற்காக என் நிலம் என்று சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து உங்களுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் என் பெரியப்பா கரசாமியிடமிருந்து  இருந்து நான் கிரையம் பெற்றேன். அந்த விதத்தில் தாவா சொத்து உரிமை உள்ளது. உங்கள் தாயார் பெயர் பாப்பம்மாள் என்றால் சரிதான். 12.07.1972 ல் உங்கள் தாயார் திருமுலு கவுண்டர் மகன் ராமசாமி என்பவரிடமிருந்து உங்கள் தாயார் பாப்பம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன ராமசாமி எனது சித்தப்பா ஆவார். மேற்சொன்ன உறவு முறைகளை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

உங்கள் தாயர் கிரையம் பெற்ற சர்வே எண்.590/2 ல் 1 ஏக்கர் 48 செண்ட் அயன் சர்வே எண்.589/1 ல் செண்ட் 46, சர்வே எண்.589/2 ல் 50 செண்ட்டும் ஆக மொத்தம் 2 ஏக்கர் 44 செண்ட்ல் பிரிவினையில்லாத 3 ல் 1 பாகத்தை உங்கள் தாயார் பாப்பம்மாள் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தான பிரிவினை இல்லாத சர்வே எண்.590/2 ல் 1 ஏக்கர் 48 செண்ட்டில் 3 ல் 1 பாகமான 49 செண்ட்டை மட்டும் உங்கள் தாயார் பாப்பம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மொத்தம் 1 ஏக்கர் 48 செண்ட்டை எனது தாயார் கிரையம் பெற்றுள்ளார். உங்கள் பிராதிலும், பிரமாண வாக்குமூலுத்திலும் உங்கள் தாயார் 49 செண்ட்டை மட்டும் தான் கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான்.

19.08.1991 ல் சர்வே எண்.590/2 ல் 1 ஏக்கர் 48 செண்ட்டில் 30 செண்ட்டை மட்டும் கிரையம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். சர்வே எண்.590/2 ல் உங்கள் தாயார் 49 செண்ட்டும், நீங்கள் கிரையம் பெற்றது 30 செண்ட்டும் சேர்த்து மொத்தம் 79 செண்ட் என்றால் சரிதான். தாவா சொத்து உங்களுக்கு கிரையப்படி பாத்தியம் என்றால் சரிதான். உங்கள் தயாருக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பேர். பாண்டி, ராமு ஆகிய நான், திருமல் ஆகியோர் ஆவோம். பாண்டி மற்றும் திருமல் ஆகியோரை இவ்வழக்கில் நீங்கள் சொல்லிவில்லை என்றால் சரிதான். திருமல் 20 வயதிலிருந்தே சொல்லிக்கொள்ளாமல் வெளியே சென்றுவிட்டார். பாண்டி ஊரில் தான் இருக்கிறார் என்றால் சரிதான், பேசிக்கொள்ள மாட்டோம். பாண்டி மற்றும் திருமல் ஆகியோரை இவ்வழக்கில் நீங்கள் சேர்க்காததால் இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வே எண்.590/2A, சர்வே எண்.590/2D ஆகிய 2 சர்வே எண்களுக்கு வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

வழக்றிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor